13.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விலை உயர்வைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து 5 ஆயிரம் டன்கள் பருப்பு இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு

நாட்டில் பருப்பு வகைகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில், வெளிநாடுகளில் இருந்து 5 ஆயிரம் டன்கள் பருப்பு வகைகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான டெண்டரை அரசு பொதுத்துறை வர்த்தக நிறுவனமான எம்.எம்.டி.சி அறிவித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக நிலவி வரும் வறட்சி காரணமாக பருப்பு வகைகளின் உற்பத்தி 2 மில்லியன் டன் அளவுக்கு குறைந்தது. இதையடுத்து, நாடு முழுவதும் பருப்பு வகைகளின் விலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பலமடங்கு உயர்ந்தது.

இதையடுத்து, வெளிநாடுகளில் இருந்து மத்திய அரசால் 5,000 டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டு மாநிலங்கள் மூலம் சந்தையில் விநியோகிக்கப்பட்டன. இருப்பினும், சந்தையில் பருப்பு வகைகளின் விலை குறையவில்லை. தொடர்ந்து அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில், தற்போது 17 மில்லியன் டன்கள் பருப்புகள் உற்பத்தியாகியுள்ள நிலையில், தேவை 23.6 மில்லியன் டன்களாக உள்ளது. தேவை அதிகமாக இருப்பதால் ஏற்கனவே கடந்த 2015-16 நிதியாண்டில் 5.5 மில்லியன் டன்கள் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், 1 மில்லியன் டன் அளவிற்கு

இப்போதும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதுவே விலை உயர்வுக்கு காரணமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து, இதற்கு தீர்வு காணும் வகையில், எம்.எம்.டி.சி வாயிலாக கனடா மற்றும் ஆஸ்திரேலியாவில் இருந்து 5 ஆயிரம் டன்கள் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய டெண்டர் அறிவிக்கப்பட்டுள்ளது.

**நன்மை செய்யும் பூச்சிகள் வளர்ப்புக்கு பயிற்சி வகுப்பு**

நன்மை செய்யும் பூச்சிகள் வளர்ப்புக் குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு கோவை, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 22-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்தி:

பயிர்களில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் காரணிகளில் பூச்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட உள்ள ஒரு நாள் பயிற்சி வகுப்பில், ஒட்டுண்ணிகள், இரை விழுங்கிகள், பூச்சிகளை அழிக்கவல்ல பாக்டீரியா, நச்சுயிரிகள் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் பயிர்ச் சாகுபடி செய்யும் உழவர்கள், பண்ணை மகளிர், வீட்டுத் தோட்டக் காய்கறி சாகுபடியாளர்கள், பெண் தொழில்முனைவோர், இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள் 0422-6611414 என்ற தொலைப்பேசி எண்ணுக்குத் தொடர்பு கொண்டு ஜூன் 20-ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பயிற்சிக்கான கட்டணம் ரூ.750. பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு மதிய உணவு, சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். இது குறித்த மேலும்

விவரங்களுக்கு, பூச்சியியல் துறை, பயிர் பாதுகாப்பு மையத்தின் தலைவரை தொடர்பு கொள்ளலாம் எனத் தெர்வி க்கப்பட்டுள்ளது.

## ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் முருங்கை விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் முருங்கை விலை உயர்ந்துள்ளது.

இச்சந்தைக்கு விருப்பாச்சி, அம்பிளிக்கை, தங்கச்சியம்மாபட்டி, காவேரியம்மாபட்டி, அரசப்பபிள்ளைபட்டி, கேதையுறும்பு, கம்பிளிநாயக்கன்பட்டி, மூலசத்திரம் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து முருங்கைக்காய் விற்பனைக்கு வரும். இந்நிலையில் கோடை மழை காரணமாக முருங்கை பூக்கள் உதிர்ந்து விட்டதால் முருங்கை சரிவர காய்க்க வில்லை. இதனால் சந்தைக்கு ஞாயிற்றுக்கிழமை முருங்கை வரத்து குறைந்ததால் அதன் விலை உயர்ந்தது. ஒரு கிலோ செடி முருங்கை ரூ.43-க்கு விற்பனையானது. இதே முருங்கை கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.30-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது. அதே போல மற்ற காய்கறிகளின் விலை நிலவரம்: சுரைக்காய்- ரூ.5, வெண்டைக்காய்- ரூ.25, சின்ன வெங்காயம் (பழையது)- ரூ.38, புதியது- ரூ.42 என விற்கப்பட்டது.

## தென்மேற்கு பருவமழைச் சாரல் தொடக்கம்: நெல் நாற்றாங்கால் தயாரிப்பில் விவசாயிகள் மும்முரம்

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் தென்மேற்கு பருவமழை சாரல் தொடங்கியுள்ளதால், முதல் போக நெல் சாகுபடிக்கு நாற்றாங்கால் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், கோட்டூர், வீரபாண்டி, பழனிசெட்டிபட்டி, உப்புக்கோட்டை, கூழையனூர், போடி ஆகிய பகுதிகளில் 14,707 ஏக்கர் பரப்பளவில் முதல் போக நெல் சாகுபடி நடைபெறும். இந்த ஆண்டு, பெரியாறு அணை நீர்பிடிப்பு மற்றும் கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதால், பெரியாறு அணைக்கு தண்ணீர் வரத்து மற்றும் தண்ணீர் இருப்பு குறைவாக இருந்தது. இதனால், அணையில் இருந்து தேனி மாவட்ட முதல்போக நெல் சாகுபடிக்கு கடந்த

ஆண்டுகளைப் போல ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறக்கப்பட வில்லை. இந்நிலையில், ஜூன் 6ஆம் தேதி முதல் பெரியாறு அணை நீர்பிடிப்பு, கேரளம் மற்றும் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை சாரல் தொடங்கியுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 12) 13.8 மி.மீ., தேக்கடியில் 5.6 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. பெரியாறு அணை நீர்மட்டம் 111.40 அடியாகவும், நீர்வரத்து விநாடிக்கு 336 கன அடியாகவும் இருந்தது. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதால், பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பதை எதிர்நோக்கி, கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் முதல் போக நெல் சாகுபடிக்கு நாற்றாங்கல் தயாரிப்பு பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விதை நெல் கையிருப்பு: மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடிக்கு தேவையான சான்று பெற்ற, ஆதார விதைகள் 300 டன் கையிருப்பில் உள்ளதாக மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சங்கரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், வேளாண்மை விரிவாக்க மையங்களில் கோ 51, ஏ.டி.டி., 36 ரக நெல் விதைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. சான்று பெற்ற மற்றும் ஆதார விதைகளுக்கு அரசு சார்பில் கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படுகிறது. வீரிய மற்றும் ஒட்டுரக நெல் விதைகளுக்கு இணையாக உள்ள சான்று பெற்ற, ஆதார விதைகள் மற்றும் உயிர் உரங்களை விவசாயிகள் வாங்கி பயன்படுத்தலாம் என்றார்.

## ரூ.1,920 கோடிக்கு தென்னை நார்ப் பொருள்கள் ஏற்றுமதி :கயிறு வாரியத் தலைவர்

2015-16 ஆண்டில் ரூ.1,920 கோடிக்கு தென்னை நார்ப் பொருள்கள் ஏற்றுமதி நடைபெற்றுள்ளதாக மத்திய கயிறு வாரியத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழகத்தில் இருந்து தென்னை நார்ப் பொருள்கள் ஏற்றுமதி ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதன் காரணமாக,

தென்னை நார்ப் பொருள்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு பொள்ளாச்சி மற்றும் மதுரையில் 3 முறை பயிற்சி அளிக்க மத்திய கயிறு வாரியம் மற்றும் வெளிநாட்டு வியாபார இந்தியப் பயிற்சி மையம் ஏற்பாடு செய்துள்ளன.

அதன்படி, பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபையில் இந்தப் பயிற்சி வெள்ளிக்கிழமை தொடங்கி மூன்று நாள்களுக்கு நடைபெறுகிறது. இப்பயிற்சியை கயிறு வாரியத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் துவக்கிவைத்தார். பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபைத் தலைவர் ஜி.டி.கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். கயிறு வாரிய விற்பனை இயக்குநர் அஜித்குமார், உறுப்பினர் மோகன்மந்தராச்சலம், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ராம்சிங், பொள்ளாச்சி மண்டல கயிறு வாரிய அலுவலர் பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், கயிறு வாரியத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

தென்னை நார் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 2014-15ஆம் ஆண்டில் ரூ.1,640 கோடியாக இருந்த தென்னை நார்ப் பொருள்கள் ஏற்றுமதி 2015-16-இல் ரூ.1,920 கோடியாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 20 சதவீதம் அதிகமாகும். மேலும், இந்த ஏற்றுமதியை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

## ரூ.9 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 9 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

வாழைத்தார் ஏல விற்பனை விவரம்: கதளி கிலோ ரூ. 54, நேந்திரன் கிலோ ரூ. 48, செவ்வாழை (தார் ஒன்றுக்கு) ரூ. 740, ரஸ்தாளி ரூ. 450, தேன்வாழை ரூ. 550, பூவன் ரூ. 650, மொந்தன் ரூ. 320, ரோபஸ்டா ரூ. 420, பச்சைநாடான் ரூ. 200-க்கும் விற்பனையானது. இதன் மதிப்பு ரூ. 9 லட்சம் ஆகும்.

தேங்காய் ஏல விற்பனை விவரம்: 9000 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக தேங்காய் ஒன்று ரூ. 8-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 4-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 60 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

## ரூ. 38 லட்சத்துக்கு விளைபொருள்கள் ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 38 லட்சத்து 39 ஆயிரத்துக்கு கொப்பரை, தேங்காய், நிலக்கடலைக்காய் ஏலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அவல்பூந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1,496 மூட்டைகளில் 72 ஆயிரத்து 739 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 54.90-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 52.55-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 52.85-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 41.55-க்கும் என மொத்தம் ரூ. 36 லட்சத்து 12 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

அதேபோல, தேங்காய் மற்றும் நிலக்கடலைக்காய் ஏலத்தில் 35 ஆயிரத்து 909 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 14 ஆயிரத்து 469-க்கும்,

குறைந்தபட்சமாக டன் ரூ. 12 ஆயிரத்து 689-க்கும் என ரூ. 1 லட்சத்து 89 ஆயிரத்து 436-க்கு ஏலம் நடைபெற்றது.

24 மூட்டைகளில் 732 கிலோ எடையுள்ள நிலக்கடலைக்காயை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக கிலோ ரூ. 54.19-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 45.89-க்கும் என மொத்தம் ரூ. 37 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

**முகூர்த்த சீசன் எதிரொலி: ஈரோட்டில் பூக்கள் விலை உயர்வு**

முகூர்த்த சீசன் என்பதால் ஈரோட்டில் பெரும்பாலான பூக்கள் விலை உயர்ந்து காணப்பட்டது. குறிப்பாக, மல்லிகைப் பூ கிலோ ரூ. 200-க்கு விற்பனையானது.

ஈரோட்டில் உள்ள பூ மண்டிகளுக்கு அந்தியூர், சத்தி, திண்டுக்கல், சேலம், நாமக்கல் போன்ற வெளிமாவட்டங்களில் இருந்து மல்லிகை உள்ளிட்ட பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

ஈரோடு நகரத்துக்கு மட்டுமின்றி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சிறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் தேவையான பூக்களை வாங்கிச் சென்று விற்பனை செய்கின்றனர்.

வெயில் காலத்தில் மல்லிகை விளைச்சல் அமோகமாக இருக்கும். அப்போது விலையும் வீழ்ச்சியடையும். பனிக் காலத்தில் மல்லிகைப் பூக்கள் சரியாகப் பூக்காது. தற்போது மாலை நேரத்தில் அவ்வப்போது மழை பெய்தாலும் பகலில் கடுமையான வெயில் அடிப்பதால் மல்லிகை வரத்து அதிகரித்துள்ளது. சீசன் இல்லாததால் கடந்த வாரம் கிலோ ரூ. 80 வரையிலும் விற்பனையான மல்லிகைப் பூ, தற்போது முகூர்த்த சீசன் தொடங்கியதும் மளமளவெள விலை உயர்ந்து கிலோ ரூ. 200 வரையிலும் விற்பனையானது. முழம் ரூ. 50 வரையிலும் விற்கப்படுகிறது. இருப்பினும், பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் ஆர்வமுடன் பூக்களை வாங்கிச் சென்றனர்.

இதுதொடர்பாக, ஈரோடு பூ மண்டி வியாபாரி பழனிச்சாமி கூறியதாவது:

அந்தியூர், நாமக்கல் பகுதிகளில் இருந்து மல்லிகைப் பூவும், சத்தியில் இருந்து சம்பங்கி பூவும், திண்டுக்கல்லில் இருந்து மருகும், சேலத்தில் இருந்து அரளி, சம்பங்கி, முல்லை போன்ற பூக்களும் ஈரோட்டுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

கடந்த வாரம் ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ. 80க்கு விற்பனையானது. ஆனால், கடந்த 2 நாள்களாக முகூர்த்த தினம் என்பதால் மல்லிகைப் பூ விலை சுமார் 3 மடங்கு உயர்ந்து கிலோ ரூ. 200-க்கு விற்பனையானது. மேலும், ரூ. 80-க்கு விற்பனையான முல்லைப் பூ 2 மடங்கு விலை உயர்ந்து ரூ. 160-க்கு விற்பனையானது என்றார்.

ஈரோட்டில் விற்பனையான மற்ற பூக்களின் விலை விவரம் (கிலோவில்):

அரளி ரூ. 50, கோழிக்கொண்டை ரூ. 140, சம்பங்கி ரூ. 50, சாதா ரோஸ் ரூ. 120, கேந்தி ரூ. 100, செவ்வந்தி ரூ. 140.

## "ஆச்சாரஅள்ளியில் புளி பதப்படுத்தும் தொழிலை மேம்படுத்த வேண்டும்

ஆச்சாரஅள்ளியில் புளி பதப்படுத்தும் தொழிலை மேம்படுத்த வேண்டும் என தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் அறிவுறுத்தினார்.
தருமபுரி ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் புதுவாழ்வுத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களுக்கான ஆய்வுக்கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது: மொரப்பூர் ஒன்றியம், மணியம்பாடி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏழை மகளிருக்கு சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டு ஆயத்த ஆடை நிறுவனமாகச் செயல்படுத்தப்படும். இவர்களுக்கு தருமபுரி மகளிர் அச்சு, எழுதுபொருள் மற்றும் தையல் சங்கத்தில் அனைவரையும் உறுப்பினர்களாக இணைத்து சமூக நலத்துறையின் கீழ் வழங்கப்படும் இலவச சீருடை போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஆயத்த ஆடை நிறுவனங்களுடன் சந்தைப் படுத்துதல் ஏற்படுத்தப்படும்.

பென்னாகரம் ஒன்றியம், ஆச்சாரஅள்ளி ஊராட்சியில் புளி பதப்படுத்தும் தொழில் கூட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் மேம்படுத்த புளி வரத்தை அதிகாரிக்க விவசாயிகளிடமிருந்து புளியமரத்தை குத்தகை (ம) நேரடியாக கொள்முதல் செய்து தூய்மைப்படுத்தி அதனை தருமபுரி மதிகோண்பாளையத்தில் உள்ள குளிர்பதன கிடங்கில் வைக்கப்பட வேண்டும்.

கூர்க்கன் கிழங்கு சேலம் மாவட்டம், ஆத்தூர் எம்.ஜி.பி. நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் துண்டு செய்யப்பட்ட விதை குச்சிகள் நடவு செய்ய வேண்டும். தற்போது, பருவ மழைக் காலம் என்பதால் பயிர் செய்வதற்கு ஏற்ற காலம். கூட்டமைப்பில் உள்ள பெண்கள் தங்கள் சொந்த நிலத்தில் இப்பயிர் செய்யலாம். இந்த கூர்க்கன் கிழங்கு ரத்த அழுத்த நோய்க்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. சமூக பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் ஆலாபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு மூலம் 210 கறவை மாடுகள் வழங்கப்பட்டு தினசரி பால் உற்பத்தி செய்யப்பட்டு ஆவின் பால் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மதிப்புக்கூட்டுப் பொருள்கள் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## தமிழகம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று சாதனை: அமைச்சர் பி.தங்கமணி

முதல்வர் ஜெயலலிதா விவசாயிகளுக்கு வழங்கி வரும் சலுகைகள், உதவிகளால் தமிழகம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று சாதனை படைத்துள்ளது என, மின்சாரம், மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் பி.தங்கமணி தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தென்னிந்திய தொழில் வர்த்தக சபை, நாமக்கல் பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய வேளாண் கருத்தரங்கம், கண்காட்சி நிறைவு விழா நாமக்கல் பி.ஜி.பி வேளாண் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். நாமக்கல் எம்.பி., பி.ஆர்.சுந்தரம், எம்எல்ஏக்கள் கே.பி.பி.பாஸ்கர், சி.சந்திரசேகரன், பொன்.சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் பங்கேற்ற மின்சாரம், மது விலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் பி.தங்கமணி பேசியது:

தமிழகத்தில் 6-ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, 32 ஆண்டு கால அரசியலில் தொடர்ந்து 2-ஆவது முறையாக முதல்வராக ஆட்சிப்பொறுப்பேற்று சாதனை படைத்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா. கோப்புகளில் இட்ட முதல் கையெழுத்து விவசாயிகளின் கடன் தள்ளுபடி.

முதல்வர் ஜெயலலிதா விவசாயிகளுக்கு வழங்கி வரும் சலுகைகள், உதவிகளால் தமிழகம் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று சாதனை படைத்துள்ளது. 2012-ஆம் ஆண்டில் இயற்கையின் சூழலால் வறட்சி ஏற்பட்ட போது விவசாயிகளைப் பாதுகாக்க முதல்வர் ஜெயலலிதா வறட்சி நிவாரண நிதியை வழங்கினார்.

மானியத்துடன் கூடிய பல்வேறு வேளாண் உபகரணங்கள், வேளாண் இடுபொருள்களும் வழங்கப்படுகிறது. குறைந்த நீரைக் கொண்டு சிறந்த விவசாயத்தை மேற்கொள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதம் மானியத்தில் சொட்டுநீர்ப் பாசன முறையை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை இருமடங்காக பெருக்குவதுடன், விவசாயிகள் வருமானத்தையும் உயர்த்திக் கொள்ள முன்வர வேண்டும் என்றார்.

சமூக நலம், சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் வி.சரோஜா பேசியது: வேளாண்மைத் துறையில் பல்வேறு திட்டங்களைத் தந்து தமிழகத்தில் மாபெரும் வேளாண் புரட்சியை ஏற்படுத்தி வருபவர் முதல்வர். நாமக்கல் மாவட்டம், விவசாயம் நிறைந்த பகுதியாக உள்ளது. விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து, விவசாயிகளைப் பாதுகாப்பதுடன், வேளாண்

உற்பத்தியைப் பெருக்க பல்வேறு தொழில்நுட்பங்களை வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர் என்றார்.

வேளாண் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்ட அமைச்சர்கள், விவசாயிகளுக்கு புதிய ரக மரவள்ளிக் கிழங்கு விதைக் கரனைகளை வழங்கினர்.

விழாவில், தென்னிந்திய தொழில் வர்த்தக சபைத் தலைவர் பழனி, ஜி.பெரியசாமி ஆகியோர் வரவேற்றனர். நாமக்கல், சேலம் ஒருங்கிணைந்த ஆவின் தலைவர் சின்னுசாமி, நாமக்கல் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கவிதா சந்திரன், அரசு வழக்குரைஞர் தனசேகர், தென்னிந்திய தொழில் வர்த்தகசபைச் செயலர் ராகவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இளநிலை வேளாண் படிப்பிற்கு 39,000 பேர் விண்ணப்பம்:துணைவேந்தர் கே.ராமசாமி

இளநிலை வேளாண் படிப்பில் சேர 39,000 பேர் விண்ணப்பம் அளித்துள்ளதாகவும், கலந்தாய்வுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும் என தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கே.ராமசாமி தெரிவித்தார்.

நாமக்கல் பிஜிபி வேளாண் கல்லூரியில் வேளாண் விளைபொருள்களுக்கான கண்காட்சி சனிக்கிழமை தொடங்கியது. இதில், பங்கேற்ற அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: இளநிலை வேளாண் படிப்பிற்கு இதுவரை 39,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தமிழகத்தில் 14 அரசு வேளாண் கல்லூரிகள், 19 தனியார் கல்லூரிகள் என, மொத்தம் 33 வேளாண் கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் 6 பட்டப் படிப்புகள், 7 தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளுக்கு மொத்தம் 2,800 இடங்கள் உள்ளன.

தனியார் கல்லூரிகளாக இருந்தாலும், வேளாண் படிப்புகளுக்கு விண்ணப்பித்தால் மட்டுமே கல்லூரிகளில் சேர முடியும். வரும். ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்குள் சேர்க்கை முடிவுற்று முதலாம் ஆண்டு வகுப்புகள்

தொடங்கும். மாணவர்கள் கலந்தாய்வுத் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றார்.

## கிருஷ்ணகிரி பகுதியில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி சுற்று வட்டாரத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக லேசாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், கிருஷ்ணகிரி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் வானம் தொடர்ந்து மேகமூட்டமாகக் காணப்படுகிறது. பகலில் வெப்பம் அதிகமாக இருந்தாலும் மாலை முதல் மழை பெய்கிறது. கிருஷ்ணகிரி மற்றும் அதை சுற்றுப் பகுதிகளான நெடுங்கல், பாரூர், காவேரிப்பட்டணம் ஆகிய பகுதிகளில் மழை பெய்தது.

இதனால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி வரையில் பெய்த மழை அளவு(மி.மீட்டரில்): நெடுங்கல் - 10.6, கிருஷ்ணகிரி - 5.8, பாரூர் - 3.

## இந்தியாவில் முதன்முறையாக பான் இந்தியா தேயிலை ஏலம்

இந்தியாவில் முதன்முறையாக பான் இந்தியா தேயிலை ஏலம் ஜூன் 23 மற்றும் 24-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

நீலகிரியில் வாரம் ஒன்றுக்கு சுமார் 10 லட்சம் கிலோ வரை தேயிலைத் தூள் உற்பத்தி செய்யப்பட்டு இங்குள்ள தேயிலை ஏல மையம் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேபோல, நாட்டில் தேயிலை ஏலம் நடக்கும் பிற பகுதிகளான அஸ்ஸாம், சிலிகுரி, கொச்சின், கொவாட்டி, கொல்கத்தா, கோவை, குன்னூர் உள்ளிட்ட அந்தந்த ஏல மையங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தேயிலையை ஏலம் மூலமாக எடுக்க முடியும்.

இதனால், சில ஏல மையங்களில் தேயிலை தேக்கமடைந்தும், வேறு ஏல மையங்களில் பற்றாக்குறையும் ஏற்பட்டு வருகிறது. மேலும், விலையிலும்

மாற்றம் ஏற்பட்டு உற்பத்தியாளர்கள், விவசாயிகள் வர்த்தகர்கள் என பலரும் கடந்த ஐம்பது ஆண்டுக்கும் மேலாக பாதிக்கப்பட்டு வந்தனர்.

இதைத்தொடர்ந்து, நாட்டில் உள்ள அனைத்து தேயிலை ஏல மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு சனி, ஞாயிறு தவிர வாரத்தில் 5 நாள்களும் ஏலம் நடத்த தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்கான 25-ஆவது ஏலம் ஜூன் 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. அன்று முதல் இந்த பான் இந்தியா தேயிலை ஏலம் தொடர்ந்து நடைபெறவுள்ளதாகத் தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் முதன்முறையாக நடைபெறும் இந்த பான் இந்தியா தேயிலை ஏலம் வர்த்தகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுகுறித்து, தேயிலை எஸ்டேட் நிர்வாகக் குழு ஆலோசகர் ஹரிமோகன் கூறுகையில், கடந்த 10 ஆண்டுகளாக நீலகிரி தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வந்தனர். ஒரே ஏல மையம் மூலமாக விற்கப்பட்டதால் பல நேரங்களில் தேயிலை விற்பனை ஆகாமல் தேக்கமடைந்தது.

தற்போது, நாட்டில் உள்ள 7 தேயிலை ஏல மையங்கள் மூலமாக இந்த ஏலம் நடைபெறுவதால் நீலகிரி தேயிலை விற்பனை ஆகாமல் தேங்கும் நிலை ஏற்பட வாய்ப்பில்லை. அதே நேரத்தில் விலையும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார். இந்த பான் இந்தியா தேயிலை ஏலம் மூலமாக விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் பயன்பெறுவர் எனத் தெரிவித்தார்.

## குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சி. சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

தமிழக முதல்வர் அறிவித்துள்ள குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்து வரும்

விவசாயிகள் விலையில்லா இயந்திர நடவு செய்வதற்கான தொகையை ஏக்கருக்கு ரூ. 4,000 வீதம் தங்களுடைய வங்கிக் கணக்கில் பெறலாம். இதற்கு தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் நடவு செய்த ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் விவசாயி வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், இயந்திர நடவு செய்ததற்கான உண்மைப் பட்டியல், சிட்டா அடங்கல், நடவு செய்த வயல்களில் விவசாயியுடன் எடுத்த புகைப்படம் ஆகியவற்றை வழங்க வேண்டும்.

உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் இடுபொருள்களான நெல் நுண்ணூட்டக் கலவை ஏக்கருக்கு 5 கிலோ வீதமும், சிங் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ வீதமும் 100% மானியத்தில் பெற தனித் தனியாக விண்ணப்பம் கொடுக்க வேண்டும்.

பாசன நீரை வயலுக்கு எடுத்துச் செல்ல (எச்.டி.பி.இ.) 90 மி.மி. விட்டமும், 20 அடி நீளமும் உள்ள குழாய்கள் கடந்த ஆண்டுகளில் வழங்கப்படாத விவசாய குடும்பத்துக்கு 100% மானியத்தில் வழங்கப்படுகிறது.

காவிரி துணை ஆறு மற்றும் கல்லணைக் கால்வாய் பகுதிகளில் குறுவை சாகுபடி செய்ய இயலாத விவசாயிகளுக்குப் பயறு வகை சாகுபடி செய்ய உழவு மற்றும் விதைப்பு மானியமாக ஏக்கருக்கு ரூ. 1,400 வீதம் பெறலாம். இதற்கான விண்ணப்பத்துடன் விவசாயி வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல், உழவு செய்ததற்கான உண்மைப் பட்டியல், சிட்டா அடங்கல், உழவு மேற்கொண்டதற்கான விவசாயியுடன் வயலில் எடுத்த புகைப்படம் ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

இந்தத் திட்டங்களில் பயன்பெற தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது வேளாண்மை அலுவலர் அல்லது துணை வேளாண்மை அலுவலர் அல்லது உதவி வேளாண்மை அலுவலரை அணுக வேண்டும்.

மேலும் விவரங்களுக்கும், சந்தேகங்களுக்கும் தஞ்சாவூர் மாவட்ட குறுவை தொகுப்பு திட்டக் கண்காணிப்பு அலுவலரும், வேளாண்மைத்

துறை துணை இயக்குநருமான ந. இளஞ்செழியனை 97509 69416 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

## தஞ்சாவூரில் நாளை கால்நடைகளுக்கான முதலுதவி பயிற்சி

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் கால்நடைகளுக்கான முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த 2 நாள் பயிற்சி முகாம் செவ்வாய், புதன்கிழமைகளில் (ஜூன் 14, 15) நடைபெறவுள்ளது. செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டு வர வேண்டும். மேலும் விவரங்களுக்கு 98424 55833, 04362-204009 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்வு

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் நீடித்து வரும் மழையால் பாபநாசம், சேர்வலாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை: கொடுமுடியாறு அணை - 30 மி.மீ, குண்டாறு அணை - 29 மி.மீ, திருநெல்வேலி - 10.1 மி.மீ, பாளையங்கோட்டை, செங்கோட்டை - தலா 10 மி.மீ, பாபநாசம் அணை - 9 மி.மீ, அடவிநயினார் அணை, கன்னடியன் அணைக்கட்டு - தலா 6 மி.மீ, கடனாநதி அணை - 5 மி.மீ, பாபநாசம் கீழ் அணை - 3 மி.மீ, சேர்வலாறு அணை - 2 மி.மீ, ராமநதி அணை - 2 மி.மீ, மணிமுத்தாறு அணை - 1 மி.மீ. தொடர் மழையால் மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக இருந்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2620.14 கனஅடி நீர் வரத்து இருந்தது. கடந்த 5 நாள்களில் பாபநாசம் அணையின் நீர்மட்டம்

20 அடியும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 22 அடியும் உயர்ந்துள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 84.20 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 110.23 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 74.07 அடியாகவும் இருந்தது.

பாசனத்துக்காக பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து 900 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து 45 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

பிற அணைகளின் நீர்மட்டம்: கடனாநதி அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 45 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம் 3.50 அடி உயர்ந்து 42.50 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 3.18 அடி உயர்ந்து 28.22 அடி, குண்டாறு அணையின் நீர்மட்டம் 1.62 அடி உயர்ந்து, 27.12 அடி, அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 1.50 அடி உயர்ந்து 52.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 23.20 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 12.70 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 21 அடியாக இருந்தது.

மழை காரணமாக பாபநாசம் பாணதீர்த்த அருவி, அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவி ஆகியவற்றில் நீர்வரத்து கணிசமாக இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காய்கறிகள் வரத்து குறைவு விலை அதிகரிப்பு**

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் உருளைக்கிழங்கு 2216 எக்டேரில், வெங்காயம் 2580, முருங்கைக்காய் 2062, காலிபிளவர் 460, பீன்ஸ் 554, கத்தரிக்காய் 668, தக்காளி 1890, கேரட் 730, பீட்ரூட் 148 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கிருந்து மதுரை, திருச்சி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. சாகுபடி காலங்களில் காய்கறிகள் விலை குறைந்தும், சாகுபடியற்ற காலங்களில் விலை அதிகரித்தும் காணப்படுகிறது.

தற்போது உள்ளூர் மற்றும் வெளியூர் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. நேற்று திண்டுக்கல் மார்க்கெட்டில் காய்கறிகளின் விலைகள் பட்டர்பீன்ஸ் ரூ.100, சோயாபீன்ஸ் ரூ.110, இஞ்சி ரூ.70, கருணைக்கிழங்கு ரூ.50, பெரியவெங்காயம் ரூ.36, சின்ன வெங்காயம் ரூ.40, கத்தரிக்காய் ரூ.42, பச்சைமிளகாய் ரூ.60,கேரட் ரூ.42, அவரைக்காய் ரூ.56, சவ்சவ் ரூ.38, பாகற்காய் ரூ.80, உருளைக்கிழங்கு ரூ.36, பீட்ரூட் ரூ.52, முருங்கைக்காய் ரூ.24, கறிவேப்பிலை ரூ.35, முட்டைக்கோஸ் ரூ.26, கொத்தமல்லி ரூ.45, புதினா ரூ.35, வெண்டைக்காய் ரூ.30, தக்காளி ரூ.60 க்கும் விற்பனையானது.

## வரத்து அதிகரிப்பால் இலவம்பஞ்சு விலை சரிவு

வருஷநாடு: வருஷநாடு பகுதிகளில் கடமலைக்குண்டு,மயிலாடும்பாறை, முத்தலாம்பாறை, வாய்க்கால்பாறை, தங்கம்மாள்புரம் உட்பட பல பகுதிகளில் சுமார் 10ஆயிரம் ஏக்கரில் இலவ பஞ்சு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு போதிய விளைச்சல் இல்லாததால் கிலோ ரூ.100 முதல் ரூ.110 வரை விற்கப்பட்டடது.

இந்தாண்டு துவக்கத்திலே விலை ரூ.70க்கும், தற்போது ரூ.49க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனனர்.

## அணைப ◌ிள்ளையார் அணைக்கு நீர் வரத்து

போடி: போடி பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்த நிலையில் கடந்த சில நாட்களாக கேரளா பகுதியில் கன மழையும், குரங்கணி, கொட்டகுடி உள்ளிட்ட மலைப்பகுதிகளில் சாரல் மழை பெய்துவருகிறது.

இதனையொட்டி கொட்டகுடி ஆற்றில் நீர் வர துவங்கியுள்ளது. வறண்டு கிடந்த ஆற்றுப்பகுதியில் நீர்வரத்து துவங்கியதையொட்டி ஆற்றோர

பகுதியில் உள்ள தோட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முந்தல் ரோட்டில் உள்ள அணைப்பிள்ளையார் அணை ஆற்றுப்பகுதியில் நீர் வரத்து துவங்கியுள்ளது. இதில் மாணவர்கள், பொதுமக்கள் சந்சோமாக குளித்து மகிழ்கின்றனர்

**மகசூல் குறைந்ததால் நெல் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலத்தில் மகசூல் குறைவால் நெல் விலை அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு நிலவிய ஏற்பட்ட வறட்சியினால் டெல்டா மாவட்டங்கள் உள்பட பல மாவட்டங்களில் நெல் விவசாயம் பாதிக்கபட்டதோடு, மகசூல் இழப்பும் ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் பலத்த பொருளாதார இழப்புக்கு உள்ளாயினர். இருந்தும் பயிர்கடனை அடைப்பதற்காக கிடைத்த நெல் முடைகளை வியாபாரிகளிடம் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்தனர்.

இந்நிலையில் கர்நாடகா, மகாராஷ்ட்ரா உள்ளிட்ட மாநிலங்களிலும் நெல் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் நெல் விலை கிடு, கிடு என உயர்ந்து வருகிறது. திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், தேவிபட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் கர்நாடகா, ஈரோடு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்ய முகாமிட்டுள்ளனர். கடந்த பிப்.,யில் டீலெக்ஸ் பொன்னி நெல்மூடை( 62கிலோ) ரூ. ஆயிரத்திற்கும், என்.எல்.ஆர். நெல்மூடை ரூ. 850 க்கும் விற்பனையானது. தற்போது நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் டீலெக்ஸ் பொன்னி மூடை ரூ. 1,500 ஆக உயர்ந்துள்ளது. என்.எல்.ஆர்.,மூடை 1,300க்கு விற்பனையாகிறது. இன்னும் நெல் விலை உயர வாய்ப்புள்ளதால் அரிசி விலையும் உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து காரைக்குடி புதுவயல் வியாபாரி தினகரன் கூறுகையில்,“ திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூடைகள் ஈரோடு, காங்கேயம், காரைக்குடி புதுவயல் பகுதிகளில் உள்ள அரிசி ஆலைகளுக்கு அனுப்ப படுகின்றன. அங்கிருந்து அரிசியாக வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு நெல் விலை

மூட்டைக்கு ரூ.300 முதல் ரூ.500 வரை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியியால் நெல் விலை உச்சகட்ட உயர்வை எட்டியுள்ளது. இன்னும் மூட்டைக்கு ரூ.100 முதல் 200 வரை விலை உயர வாய்புள்ளது," என்றார்.

## பருத்தி காய்களை தரம் பிரிக்கும் பணியில் விவசாயிகள் மும்முரம்

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் அருகே பருத்தியிலிருந்து பஞ்சுகளை பிரித்தெடுக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆர்.எஸ்.மங்கலம் அருகே செங்குடி, வரவணி, வண்டல், வ.பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இவை தற்போது அறுவடையாகி வருகிறது. செடிகளிலிருந்து வெடித்த பருத்தி காய்களை சேகரிக்கும் விவசாயிகள் அவற்றிலிருந்து பஞ்சு, கொட்டைகளை தனித்தனியே பிரித்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பஞ்சுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி பாலு கூறுகையில்,"பருத்தி செடிகளில் வெடித்துள்ள காய்களை காலை நேத்தில் பறித்தால் மட்டுமே தரமான பஞ்சுகள் கிடைக்கும். இதனால் காலை நேரத்தில் வயல்களில் பறித்து வரும் பருத்தி காய்களை வீட்டில் அமர்ந்து தரம் பிரித்து விற்பனை செய்கிறோம்," என்றார்

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் ரூ.4 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல் : நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நேற்று நடைபெற்றது. இதில் மொத்தம் 200 மூட்டை ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பல்வேறு ஊர்களை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் கேட்டனர். டிசிஎச் ரகம் ஒரு குவிண்டால் ரூ. 5,599 முதல் ரூ. 6,355 வரையும், ஆர்.சி.எச் ரகம் ஒரு குவிண்டால் ரூ. 4,860 முதல் ரூ. 5,489 வரையும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 4 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

### திருச்செங்கோட்டில் 2300 மஞ்சள் மூட்டை ரூ.1.10 கோடிக்கு விற்பனை

திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 2,300 மஞ்சள் மூட்டை ரூ. 1.10 கோடிக்கு விற்பனையானது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதை கொள்முதல் செய்ய, ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர்.

டெண்டர் மூலம் ரூ. 1.10 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ. 8,549 முதல் 10,710 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ. 8,199 முதல் ரூ. 9,109 வரை விலைபோனது. பனங்காளி ரகம் ரூ. 9,416 முதல் அதிகபட்ச விலையாக 23,419 வரை விற்றது.

மஞ்சள் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. மற்ற மார்கெட்டுகளை விட விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ. 400 அதிகம் கிடைத்தது என கூட்டுறவு சங்கத்தின் மேலாண் இயக்குனர் ஹேமா தெரிவித்தார்.

## காய்கறி வரத்து அதிகரிப்பு: தக்காளி, பீன்ஸ் விலை சரிகிறது

கோவை, : கோவை மொத்த காய்கறி மார்க்கெட், உழவர் சந்தை ஆகியவற்றில் குறைந்து வந்த காய்கறி வரத்து அதிகரித்து வருவதால் பெரும்பாலான காய்கறிகளின் விலை சரிந்து வருகிறது.கோவை மேட்டுப்பாளையம் ரோட்டிலுள்ள எம்.ஜி.ஆர்.மொத்த காய்கறி மார்க்கெட் மற்றும் ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர் உழவர் சந்தைகள் ஆகியவற்றில் கடந்த ஒரு மாதமாக கடும் கோடை காரணமாக காய்கறி வரத்து 3ல் 1 பங்கு குறைந்தது. இதனால் விலை உயர்ந்து வந்தது. இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக வரத்து அதிகரித்து வருவதால் பெரும்பாலான காய்கறிகளின் விலை சீரடைந்து வருகிறது. சில காய்கறிகளின் விலை சற்று உயர்ந்துள்ளது.

நேற்று ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் சரிவடைந்த காய்கறி விலை நிலவரம் (அடைப்புக்குறிக்குள் கடந்த 8ம் தேதி நிலவிய விலை) : கத்தரி ரூ.16-28 (20-38), நாட்டு தக்காளி ரூ.52-58 (56-64), ஆப்பிள் தக்காளி ரூ.56-60 (58-70), அவரை ரூ.42-60 (50-60), பீர்க்கங்காய் ரூ.36-40 (40-48), பாகற்காய் ரூ.26-30 (30-40), பூசணி ரூ.7-14 (8-14), பச்சை மிளகாய் சம்பா ரூ.26-30 (48-56), பச்சை மிளகாய் குண்டு ரூ.28-36 (40-50), வாழைக்காய் ரூ.16-22 (18-24), உருளைக்கிழங்கு ரூ.24-40 (24-44), முள்ளங்கி ரூ.20-32 (20-36), முட்டைக்கோஸ் ரூ.18-28 (24-32), பீன்ஸ் (சாதா) ரூ.40-50 (50-70), கறி பீன்ஸ் ரூ.50-60 (60-80), புஸ் பீன்ஸ் ரூ.70-80 (80-90), வெண்டை ரூ.26-30 (24-32), அரசாணிக்காய் ரூ.12-16 (10-18), காலிபிளவர் ரூ.30-38 (30-48)

விலை உயர்ந்துள்ள காய்கறிகள் : கொத்தவரை ரூ.24-28 (22-28), முருங்கை ரூ.42-50 (40-48), சேனைக்கிழங்கு ரூ.44-48 (40-48), புடலை

36-40 (26-32), சின்ன வெங்காயம் ரூ.40-48 (40-44), பெரிய வெங்காயம் ரூ.14-18 (12-17).

**முருங்கை வரத்து குறைந்தது கிலோ ரூ.60க்கு விற்பனை**

கோவை, : முருங்கைக்காய் வரத்து குறைவு காரணமாக ஒரு கிலோ முருங்கைக்காய் கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரை விற்கப்படுகிறது. கடந்த மாதம் வரை கிலோ ரூ.17க்கு விற்ற நிலையில் தற்போதைய உயர்வு பொதுமக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.கோவையிலுள்ள மொத்த காய்கறி விற்பனை நிலையங்களுக்கு வரக்கூடிய முருங்கைக்காய் திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து அதிகளவில் வருகிறது. இது தவிர கோவை சுற்று வட்டாரத்தில் விளையும் முருங்கைக்காய்களை விவசாயிகள் உழவர் சந்தைகளுக்கு கொண்டு வருகின்றனர். கடந்த ஏப்ரல், மே மாதத்தில் வரத்து அதிகம் காரணமாக ஒரு கிலோ ரூ.17 வரை சரிந்தது.

இந்நிலையில் இம்மாதம் அறுவடை முடியும் தறுவாயில் உள்ளதால் வரத்து குறைய துவங்கியுள்ளது. இதனால் தற்போது மொத்த மார்க்கெட்டில் கிலோ ரூ.35 முதல் ரூ.40 வரையும், உழவர் சந்தைகளில் ரூ.40 முதல் ரூ.48 வரையும், சில்லரை விற்பனை நிலையங்களில் ரூ.50 முதல் ரூ.60 வரையும் விற்கப்படுகிறது.ஒரு காய் சராசரியாக 100 கிராம் வரை உள்ளதால் ரூ.8 முதல் ரூ.10க்கு விற்கப்படுகிறது.

சாம்பார் சுவையாகவும், மணமாக இருக்க முருங்கைக்காய் போட்டு சமைப்பது வழக்கம். தற்போதைய விலை உயர்வால் பொதுமக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.முருங்கைக்காய் ஜூலை வரை வரத்து குறையும் என்பதால், விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது. ஜூலை இறுதி முதல் வரத்து மீண்டும் அதிகரிக்க துவங்கும், விலை சரியும், என்கின்றனர் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள்.

## மேட்டூர் அணை திறக்கப்படாததால் கோடை மழையை நம்பி சாகுபடி பணி

கரூர் : மேட்டூர் அணை திறக்கப்படாததால் கோடை மழையை நம்பி விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொண்டுள்ளனர். கரூர் மாவட்டத்தில் கடந்த ஜனவரி, பிப்ரவரியில் பெய்த மழைநீர் மாயனூர் தடுப்பணையில் சேமிக்கப்பட்டது. காவிரி நதி ஏற்பட்ட நாளில் இருந்தே 1924, 1897ம் ஆண்டு ஒப்பந்தங்களுக்கு முன்பே, மேட்டூருக்கு கீழ் கல்லணைக்கு இடையில் காவிரியில் வலது, இடது புறத்தில் 17 வாய்க்கால்கள் ஏற்படுத்தப்பட்டன.

மேட்டூருக்கு கீழே 51 வது மைலில் ஜேடர்பாளையம் படுகை அணை உள்ளது. இதன் மூலம் புகழூர் வாய்க்கால், ராஜகுமாரபாளையம் வாய்க்கால், வாங்கல் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால், நெரூர் வாய்க்கால், காட்டுப்புத்தூர் வாய்க்கால், வடகரை வாய்க்கால் ஆகிய வாய்க்கால்கள் பயன் பெற்று வருகின்றன. மேட்டூருக்கு கீழ்பகுதியில் 81வது மைலில் கட்டளை படுகை அணை 1936ம் ஆண்டு கட்டப்பட்டது.

115வது மைலில் முக்கொம்பு மேலணையும், 131 வது மைலில் சோழன் கட்டிய கல்லணை உள்ளது. கல்லணை முதல் காவிரி டெல்டா நன்செய் நிலங்கள் பயன்பெறுகின்றன. மாயனூர் கட்டளை படுகை அணையை கதவணையாக மாற்ற வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கதவணை சாலை பாலத்துடன் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு 1.4 டிஎம்சி நீர் கொள்ளளவு உள்ளது. வடகிழக்கு பருவமழையின் போதும் இந்த கதவணையில் ஒரு டிஎம்சி நீர் சேமிக்கப்பட்டது.

வழக்கமாக ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும். கடந்த 5 ஆண்டுகளாக குறித்த காலத்தில் மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டும் அணையில் நீர் திறக்கவில்லை. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தற்போது பெய்த கோடை மழையை நம்பி சாகுபடி பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

மாயனூர் தடுப்பணையில் ஒரு டிஎம்சி நீர் தேக்கப்பட்டதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இந்த நீரை பயன்படுத்தி சாகுபடி பணிகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவித்தனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பருவமழையின்போது மாயனூர் கதவணை நிரம்பியதால் 30 கிமீ சுற்றளவுக்கு நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. கிணறுகளில் நீர் இருப்பு உள்ளது.

இந்த அணையில் இருந்து கிருஷ்ணராயபுரம் வாய்க்கால் மூலம் 1200 ஏக்கர், தென்கரைவாய்க்கால் 7ஆயிரம் ஏக்கர், கட்டளை மேட்டுவாய்க்கால் 2055 ஏக்கர், உய்யகொண்டான்வாய்க்கால் 2374 ஏக்கர், புதுஅய்யன் வாய்க்கால் 1790 ஏக்கர், வடகரை வாய்க்கால் 10400 ஏக்கர் என ஆண்டு பயிர்களான வாழை, கரும்பு, கொடிக்கால் பயிரிடப்படுகின்றன. கதவணையில் ஒரு டிஎம்சி நீர் தேக்கப்பட்டு கரூர், திருச்சி, தஞ்சை பாசன பகுதி வாய்க்கால்கள் மூலம் குடிநீர், ஆண்டு பயிர் சாகுபடிக்கு நீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பருவ மழை கடந்த ஆண்டைப் போல நன்றாக பெய்தால் நெல், கரும்பு, வாழை விளைச்சல் நன்றாக இருக்கும். மேட்டூரில் தண்ணீர் திறக்கப்படாத நிலையில் மோட்டார் பம்ப் செட் வசதியுள்ள விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடியை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## வாழைக்கழிவு மண்புழு கம்போஸ்ட் பயன்பாட்டால் ஆண்டுக்கு ரூ.913 கோடி சேமிப்பு தேசிய வாழை ஆராய்ச்சி மையம் தகவல்

திருச்சி : மண்புழு கம்போஸ்ட் முறையால் ஆண்டுக்கு சுமார் ரூ.913கோடி சேமிக்க முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 8.30 லட்சம் எக்டேர் பரப்பளவில் வாழை பயிரிடப்படுகிறது. இதில் 298 லட்சம் டன் வாழைத்தார் உற்பத்தி செய்யப்படுகிறது. வாழை உற்பத்தியிலும் (82.5 லட்சம் டன்), உற்பத்தித் திறனிலும் (65.8டன்) தமிழக முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் பூவன், கற்பூர வள்ளி, நெய்பூவன், ரஸ்தாளி, மொந்தன், நேந்திரன், செவ்வாழை, ரொ பஸ்டா என பல தரப்பட்ட வாழை ரகங்கள் பயிரிடப்படுகின்றன.

பொதுவாக, தமிழ் நாட்டில் வாழைச் சாகுபடி நஞ்சை மற்றும் தோட்டக்கால் முறைகளில் செய்யப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு 298 லட்சம் டன் வாழை உற்பத்தி செய்யும் பொழுது, சுமார், 375லட்சம் டன் அளவில், இலைச்சருகு, தண்டு, கிழங்கு, கொன்னைப்பகுதி போன்ற வாழைக் கழிவுகள் உருவாகின்றன. தோட்டக்கால் முறை வாழை சாகுபடியில் வாழை கழிவுகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

இந்த வாழை கழிவுகளில் அபரிமிதமான ஊட்டச்சத்துக்கள் வீணாகின்றன. வாழை சாகுபடியில் நாம் பயன்படுத்தும் ஊட்டச் சத்துகளில் சுமார் 4 முதல் 56 சதம் வாழை காய்களிலும், பழங்களிலும் சேகரிக்கப்பட்டு மண்ணிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. மீதமுள்ள 44 முதல் 96 சதம் ஊட்டச்சத்துகள், வாழை மரத்தின் மற்ற பகுதிகளான இலைச்சருகு, தண்டு, இலையுறை, கிழங்கு போன்றவைகளில் சேகரிக்கப்பட்டு கழிவுகளாக வீணாக்கப்படுகின்றன.

இத்தகைய கழிவுகளை மண்புழு கம்போஸ்டாக மாற்றி அதனை மீண்டும் வாழைச் சாகு படிக்கே பயன்படுத்தலாம். ஒரு எக்டரிலிருந்து பெறப்பட்ட வாழைக் கழிவிலிருந்து தயாரிக்கப்படும் மண்புழு கம்போஸ்டில், சுமார் ரூ.2,587 மதிப்புள்ள தழை சத்தும், ரூ.483 மதிப்புள்ள மணிச்சத்தும், ரூ.7,920 மதிப்புள்ள சாம்பல் சத்தும் உள்ளன.

வாழைக்கழிவு மண்புழு கம்போஸ்டை வாழைச் சாகுபடியில் மறுசுழற்சி செய்தால், மண்ணி லிடப்படும் செயற்கை உரத்தின் அளவைக் குறைத்து ஒரு எக்டர் வாழை உற்பத்தியில் ஆகும் உரச்செலவில் ரூ.11,000 சேமிக்கலாம். மேலும், இம்முறையில், 2ம் நிலை பேரூட்டச் சத்துக்களான சுண்ணாம்பு, மக்னீசியம், கந்தகம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களும் மறு சுழற்சியாவதால் மண்வளம் மேம்படுத்தப்பட்டு, வாழையில் அதிக மகசூலும் எடுக்க முடிகிறது.

இது குறித்து தேசிய வாழை ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கூறுகையில், மண்புழு கம் போஸ்ட் முறை அனைத்து வாழை சாகுபடி பகுதிகளிலும் நடை முறைப்படுத்தினால், வருடத்திற்கு சுமார் ரூ.913கோடி சேமிக்க முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது என்றனர்.

**48 கிராமங்களில் குறுவை சாகுபடி திட்ட விழிப்புணர்வு முகாம் திருவோணம் வட்டாரத்தில் நடக்கிறது**

பட்டுக்கோட்டை, : குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் திருவோணம் வட்டாரத்தில் 48 கிராமங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறுவதாக வேளாண்மை உதவி இயக்குனர் மதியரசன் தெரிவித்துள்ளார்.
குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக முதல்வரால் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும், நுண்ணூட்டக்கலவை உரம் பயன்படுத்தும் விவசாயிகளுக்கும் மானியம் என்ற திட்டத்தையும், நீர் ஆதாரத்தை விரையம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்தும் விதமாக எச்.டி.பி.இ பைப்புகள் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 30 பைப்புகள் என்ற விகிதத்தில் ரூ.20,000 மானியம் என்ற திட்டத்தினையும் அறிவித்துள்ளார்.

மேற்கண்ட திட்டங்களை விவசாயிகள் அறியும் வண்ணம் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறவுள்ளது. அதன்படி, இன்று (13ம் தேதி) நெய்வேலி (வடக்கு) அதம்பை (வடக்கு) மற்றும் பெரிய அம்மங்குடி கிராமங்களிலும், நாளை (14ம்தேதி) அக்கரைவட்டம், இலுப்பவிடுதி மற்றும் மேடையக்கொல்லை ஆகிய கிராமங்களிலும், 15ம் தேதி பின்னையூர் (கிழக்கு), ஊரணிபுரம் மற்றும் இடையங்காடு ஆகிய கிராமங்களிலும், 16ம் தேதி வெட்டுவாக்கோட்டை, தோப்புநாயகம் மற்றும் தளிகைவிடுதி ஆகிய கிராமங்களிலும் நடக்கிறது.

18ம் தேதி காயாவூர், தெற்குகோட்டை ஆகிய கிராமங்களிலும் 20ம் தேதி காவாளிப்பட்டி, வெங்கரை மற்றும் காரியாவிடுதி கிராமங்களிலும், 21ம் தேதி சோழகன்கரை, சங்கரநாதர்குடிக்காடு மற்றும் உஞ்சியவிடுதி ஆகிய கிராமங்களிலும், 22ம் தேதி ராஜாளிவிடுதி, பெரியகோட்டைக்காடு மற்றும் வடக்குக்கோட்டை ஆகிய கிராமங்களிலும் 23ம் தேதி சென்னியவிடுதி, அனந்தகோபாலபுரம் (தெற்கு) மற்றும் சின்ன

அம்மங்குடி ஆகிய கிராமங்களிலும், 25ம் தேதி சோழகன்குடிக்காடு மற்றும் பாதிரங்கோட்டை (தெற்கு) ஆகிய கிராமங்களிலும் நடக்கிறது.

27ம் தேதி வேதநாயகிபுரம் மற்றும் வெட்டிக்காடு (மேற்கு) ஆகிய கிராமங்களிலும் 28ம் தேதி பணிகொண்டான்விடுதி, நெய்வேலி (தெற்கு) மற்றும் அதம்பை (தெற்கு) ஆகிய கிராமங்களிலும், 29ம் தேதி கொள்ளுக்காடு, சில்லத்தூர் மற்றும் நெம்மேலி திப்பியக்குடி ஆகிய கிராமங்களிலும், 30ம் தேதி பொய்யுண்டார்குடிக்காடு மற்றும் பின்னையூர் (மேற்கு) கிராமங்களிலும் நடைபெறவுள்ளது. விவசாயிகள்விழிப்புணர்வு முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தென்னையில் சத்து பற்றாக்குறை போக்கும் வழிமுறை

சேதுபாவாசத்திரம், : தென்னையில் காணப்படும் சாம்பல்சத்து மற்றும் போரான் சத்து பற்றாக்குறையை போக்கும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சாந்தி வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னைக்கு மற்ற சத்துக்களைவிட சாம்பல் சத்து தான் மிக அதிகமாக தேவைப்படுகிறது. இந்த சத்து குறைந்தால் தேங்காய் அளவு சிறுத்து, எண்ணிக்கையும் குறைந்துவிடும்.

மேல் இலைகள் பசுமையாக இருந்தாலும் அடி இலைகளில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் தோன்றி மஞ்சள் நிறமடைந்து பின்னர் பழுப்பு நிறமடையும். இலைகள் கீழ்நோக்கி தொங்க தொடங்கும். முதிர்ச்சியடையும் முன்பே இலைகள் உதிர்ந்து விடும். இக்குறையை போக்க 5 ஆண்டுக்கு மேல் வயதுடைய தென்னை மரத்துக்கு ஓராண்டுக்கு 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் யூரியா 1.300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் மூன்றரை கிலோ உரங்களை கலந்து மரத்தடியிலிருந்து 5 அடி தள்ளி வட்டமாக உரமிட்டு மண் வெட்டியால் உரத்தை மண்ணுடன் கலந்து பிறகு நீர்பாய்ச்ச வேண்டும்.

மேற்கண்ட உரத்தினை இரண்டாக பிரித்து ஜூன்- ஜூலை மாதத்திலும், டிசம்பர்- ஜனவரி மாதத்திலும் இரண்டு முறையாக பிரித்து இட வேண்டும். பொட்டாஷ் உரம் 2 கிலோவுக்கு பதிலாக மூன்றரை கிலோ இடுவதால் தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தி கட்டுப்படுத்தப்படுகிறது. போரான்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இளம் கன்றுகளில் இலை பிரியாமல் இருக்கும். வளரும் குருத்து இலைகள் வளர்ச்சி குன்றி இலைகள் பிரியாமல் இருக்கும். பாலையில் இளம்பிஞ்சுகள் காய்ந்து கருப்பாக காணப்படும்.

குரும்பைகள் அதிகமாக கீழே உதிரும். வெற்று தேங்காய்கள் மற்றும் ஒல்லிக்காய்கள் தோன்றும். தேங்காய்களில் வெடிப்புகளும், நீளமான் எடை குறைந்த தேங்காய்கள் தோன்றும். இக்குறைகளை போக்க நன்கு வளர்ந்த தென்னை மரத்துக்கு ஆண்டுதோறும் ஒரு மரத்துக்கு ஒரு கிலோ வீதம் தென்னை நுண்ணூட்ட சத்து உரத்தை இட வேண்டும் அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தயாரிப்பான தென்னை ஊட்டச்சத்து கரைசல் (தென்னை டானிக்) மரம் ஒன்றுக்கு 200 மில்லி வீதம் 6 மாதத்துக்கு ஒரு முறை வேர் மூலம் செலுத்த வேண்டும்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வேளாண் இணை இயக்குனர் ஆய்வு

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை சென்னை தலைமை அலுவலக வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இணை இயக்குனர் இளங்கோ நேற்று முன்தினம் இரவு ஆய்வு செய்தார். அப்போது அந்த வளாகத்தில் உள்ள நெல் சேமிப்பு கிடங்கு மற்றும் உழவர் சந்தை ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது, உழவர்சந்தையில் கழிப்பிட வசதி மற்றும் விவசாயிகள் நெல் மற்றும் தானியங்களை குடோனில் இருப்பு வைக்க ஏதுவாக தானியங்களை உலர வைக்க பழுதடைந்த களத்தை சீரமைக்க வேண்டும். நபார்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கிடங்கில் இருப்பு வைக்க வசதியாக கூடுதலாக கேட் வசதி செய்து தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று தமிழக

இயற்கை உழவர் இயக்க மாநில செயலாளர் நெல்ஜெயராமன், இணை இயக்குனரிடம் கோரிக்கை வைத்தார். மாவட்ட விற்பனை குழு செயலாளர்கள் திருவாரூர் சேரலாதன், தஞ்சை ரவி, மாவட்ட துணை வேளாண் இயக்குனர் மனோகரன், ஓய்வு பெற்ற வேளாண்மை துணை இயக்குனர் நடேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## தேனீ வளர்ப்பு பயிற்சி

சின்னமனூர், : அணைப்பட்டியில் சின்னமனூர் நியூஸ் தொண்டு நிறுவனமும், தேனி நபார்டு வங்கியும் இணைந்து மகளிர் சுய உதவிகுழுவினர்களுக்கு இலவசமாக ஒரு வாரம் தேனீ வளர்ப்பு பயிற்சி நடத்தியது. தேனி மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் வெங்கட்ரமணா துவக்கி வைத்தார். ராயப்பன்பட்டி கனரா வங்கி மேலாளர் பொன்ராஜா முன்னிலை வகித்தார்.

மகளிர் குழுக்கள் 30 பேர் பயிற்சி பெற்றனர். அவர்களுக்கு கம்பம் ஆக்ஸிஸ் வங்கி வளர்ச்சி மேலாளர் காமராஜ், தொழில் முனைவோர் பயிற்றுநர் ஜெயச்சந்திரன், தேனி மாவட்ட குழந்தைகள் நல குழுத்தலைவர் செல்வராஜ் தொழில் தொடங்குவதில் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

## வரும் 17ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 17ம் தேதி காலை 11.30 மணிக்கு கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு தங்கள் குறைகள், புகார்களைத் தெரிவிக்கலாம் என கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## வால்பாறையில் தொடர் மழை: அக்காமலை தடுப்பணை நிரம்பியது



வால்பாறை,

வால்பாறையில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக அக்காமலை தடுப்பணை நிரம்பியது.

மழை

வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. ஒரு சில நேரங்களில் பலத்த மழை பெய்வதால் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் அடிப்படை அணையான சோலையார் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

சோலையார்அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி வால்பாறையில் 24 மி.மீ., சோலையார்அணையில் 80 மி.மீ., சின்னக்கல்லாரில் 18 மி.மீ., நீராரில் 22 மி.மீ. மழையும் பதிவாகி உள்ளது. மேலும் சோலையார் அணைக்கு வினாடிக்கு 628 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

தடுப்பணை நிரம்பியது

பலத்த மழை காரணமாக வால்பாறை நகருக்கு குடிநீர் வழங்கும் அக்காமலை தடுப்பணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் கோடையில் தண்ணீர் குறைவாக காணப்பட்ட அக்காமலை தடுப்பணை தற்போது நிரம்பி வழிகிறது. மேலும் நீரார், சின்னக்கல்லார் பகுதியிலும் மழை பெய்து வருவதால் நடுமலை ஆற்றிலும் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

வால்பாறையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நகர் பகுதியிலும், எஸ்டேட் பகுதியிலும் கடுங்குளிர் நிலவுகிறது. மேலும் மழையால் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மழையால் வால்பாறைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது. இதனிடையே அக்காமலை தடுப்பணை நிரம்பி வழிவதால் வால்பாறை நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நீலகிரி மலைப்பகுதியில் மழை பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



பவானிசாகர்,

நீலகிரி மலைப்பகுதியில் மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது.

<u>மண் அணை</u>

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற புகழ்பெற்றது பவானிசாகர் அணை. நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் பகுதியில் இருந்து வரும் மோயாறும் கலக்கும் இடமே பவானிசாகர் அணையாகும். இந்த அணையின் மொத்த உயரம் 120 அடியாகும். இதில் 15 அடி சேறும் சகதியும் போக அணையின் கொள்ளளவு 105 அடியாக கணக்கிடப்படுகிறது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளாக நீலகிரி மலைப்பகுதியில் உள்ள குன்னூர், கோத்தகிரி, குந்தா, மேல் பவானி, எமரால்டு, கூடலூர், மேட்டுப்பாளையம் ஆகியவை உள்ளன.

இந்த அணையில் இருந்து வரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட பகுதியில் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய

நிலங்கள் பாசனவசதி பெறுகிறது. பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீரால் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் காலிங்கராயன் பாசன பகுதிகளை சேர்ந்த சுமார் 50 ஆயிரம் விவசாய நிலங்கள் பாசன வசதிபெறுகிறது.

பவானிசாகர் அணையின் தண்ணீர் மூலம் புஞ்சைபுளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி ஆகிய நகராட்சிகள், பவானிசாகர், அரியப்பம்பாளையம் உள்ளிட்ட 25–க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் மேலும் நூற்றுக்கணக்கான கிராம ஊராட்சிகள் குடிநீர் வசதி பெறுகிறது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

இந்தநிலையில் கடந்த சில மாதங்களாக பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் போதிய மழையில்லாத காரணத்தால் அணைக்கு குறைந்த அளவே தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் தென்மேற்கு பருவ மழை காரணமாக நீலகிரி மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது இதன்காரணமாக அணைக்கு வரும் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 237 கன அடியாக இருந்த நீர் வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 1,419 கன அடியாக அதிகரித்தது. கடந்த மே மாதம் 15–ந் தேதிக்கு பின்னர் நேற்று தான் அணையின் நீர் வரத்து ஆயிரம் கன அடியை தாண்டி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

அணையில் இருந்து பவானி ஆற்றுக்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலில் 5 கன அடி தண்ணீரும் திறந்து விடப்படுகிறது. நேற்று காலை 8 மணிநிலவரப்படி அணையின் நீர்மட்டம் 38.42 அடியாக இருந்தது.

தென்மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்து வருவதால் நீலகிரி மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் நீரின் வரத்து மேலும் அதிகரித்து நீர் மட்டம் உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**கன்னிப்பூ சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணையில் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 200 கனஅடி வெளியேற்றம்**



கன்னிப்பூ சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணையில் இருந்து நேற்று வினாடிக்கு 200 கனஅடி தண்ணீர் நேற்று திறந்து விடப்பட்டது.

கலெக்டர் திறந்து விட்டார்

குமரி மாவட்ட நெல் விவசாயத்தின் முக்கிய நீராதாரமாக திகழ்வது பேச்சிப்பாறை அணை. 48 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் நேற்றைய நீர்மட்டம் 36.95 அடி ஆகும். இந்த அணை நீரை நம்பி குமரி மாவட்டத்தில் கன்னிப்பூ மற்றும் கும்பப்பூ என இருபோக சாகுபடி நடைபெற்று வருகிறது. இதில் முதல் போக சாகுபடி கன்னிப்பூ சாகுபடி ஆகும். இந்த சாகுபடிக்காக ஆண்டுதோறும் ஜூன் 1–ந் தேதி பேச்சிப்பாறை அணையில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டும் 1–ந் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் அது காலதாமதம் ஆனது. இந்த நிலையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அணை திறப்பதற்கான உத்தரவை பிறப்பித்தார். அதன் டிப்படையில் நேற்று

மாலை 4 மணி அளவில் மாவட்ட கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பேச்சிப்பாறைக்கு சென்று அணை நீரை திறந்து விட்டார்.

<u>மலர்கள் தூவப்பட்டன</u>

அப்போது விவசாயிகளும், விவசாய சங்க பிரதிநிதிகளும் கைகளை தட்டி ஆரவாரம் செய்தனர். பாசனத்துக்காக பாய்ந்தோடிய தண்ணீரில் நெல்மணிகளும், மலர்களும் தூவப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் சுப்பிரமணி, நெல்லை கண்காணிப்பு பொறியாளர் அப்துல் அமீது, மனோதங்கராஜ் எம்.எல்.ஏ., பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்டோ, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சாரதாமணி மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பேச்சிப்பாறை அணையில் நேற்று 200 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இந்த தண்ணீர் புத்தன் அணைக்கு வந்து அங்கிருந்து பாண்டியன் கால்வாய் வழியாக தோவாளை கால்வாய்க்கு செல்லும். நாளை (திங்கட்கிழமை) பூதப்பாண்டி பகுதி கால்வாயில் தண்ணீர் பாயும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மழையின் அளவை பொறுத்து அணையில் கூடுதலாக தண்ணீர் திறப்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றும், தேவையைப் பொறுத்து 79 ஆயிரம் ஏக்கர் பாசனத்தை கருத்தில் கொண்டு பெருஞ்சாணி, சிற்றார் அணைகளில் தண்ணீர் திறக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அணை திறப்பு நிகழ்ச்சிக்கு எம்.எல்.ஏ.க்களுக்கு அழைப்பு இல்லை என்று கூறி கட்சியினர் சிலர் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறிதுநேரம் பரபரப்பு நிலவியது.

**நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை இருமடங்காக பெருக்க வேண்டும் விவசாயிகளுக்கு அமைச்சர் தங்கமணி அறிவுறுத்தல்**




பரமத்தி வேலூர்,

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை இருமடங்காக பெருக்குவதோடு, வருமானத்தையும் உயர்த்திக்கொள்ள முன்வரவேண்டும் என்று விவசாயிகளுக்கு அமைச்சர் தங்கமணி அறிவுறுத்தினார்.

<u>கருத்தரங்கம்–கண்காட்சி</u>

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தென்னிந்திய தொழில் வர்த்தகசபை மற்றும் நாமக்கல் பி.ஜி.பி. வேளாண்மை அறிவியல் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய வேளாண் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நிறைவுவிழா நாமக்கல் – சேந்தமங்கலம் சாலை வேட்டாம்பாடியிலுள்ள பி.ஜி.பி. வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். பி.ஆர்.சுந்தரம் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கே.பி.பி.பாஸ்கர், சந்திரசேகரன், பொன்.சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் பி.தங்கமணி, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா ஆகியோர் கலந்துகொண்டு வேளாண் கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டனர். தொடர்ந்து விவசாயிகளுக்கு புதியரக மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி விதைக்கரனைகளை அமைச்சர்கள், விவசாயிகளுக்கு வழங்கினர்.

<u>அமைச்சர் தங்கமணி</u>

பின்னர் அமைச்சர் தங்கமணி பேசியதாவது:– தமிழகத்தில் 6–வது முறையாக ஆட்சிப்பொறுப்பை ஏற்று 32 ஆண்டுகால அரசியலில் தொடர்ந்து 2–வது முறையாக தமிழக முதல்–அமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்று சாதனை படைத்துள்ள முதல்–அமைச்சர் ஜெயலலிதா பதவியேற்றவுடன் கோப்புகளில் இட்ட முதல் கையெழுத்து விவசாயிகளின் கடன் தள்ளுபடிக்கான கையெழுத்ததாகும். விவசாயிகளுக்காக எண்ணற்ற பல திட்டங்களை முதல்–அமைச்சர் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறைந்த நீரைக்கொண்டு சிறந்த விவசாயத்தை மேற்கொள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனமுறையை அமைத்துக்கொடுக்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

எனவே வேளாண் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை இருமடங்காக பெருக்குவதோடு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திக்கொள்ள முன்வரவேண்டும். இவ்வாறு அமைச்சர் தங்கமணி பேசினார்.

<u>அமைச்சர் சரோஜா</u>

நிகழ்ச்சியில் அமைச்சர் சரோஜா பேசியதாவது:– நாமக்கல் மாவட்டம் விவசாயம் நிறைந்த பகுதியாகும். விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விவசாயிகளை பாதுகாப்பதோடு வேளாண் உற்பத்தியை பெருக்கிட பல்வேறு தொழில்நுட்பங்களை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வேளாண்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார். விவசாயிகள் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திட வேளாண் கருவிகள், வேளாண் உபகரணங்கள், நலத்திட்ட உதவிகளையும் முதல்–அமைச்சர் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார். முதல்–அமைச்சர் வேணாண்மைத்துறை, அதனைசார்ந்த துறைகளில் அறிவித்து

செயல்படுத்தி வருகின்ற அனைத்து நலத்திட்டங்களையும், உதவிகளையும், விவசாய மக்கள் முழுமையாக பெற்று பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு அமைச்சர் சரோஜா பேசினார்.

விழாவில் தென்னிந்திய தொழில்வர்த்தக சபைத்தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி வரவேற்றார். நாமக்கல், சேலம் ஒருங்கிணைந்த ஆவின் தலைவர் சின்னுசாமி, நாமக்கல் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் கவிதாசந்திரன் அரசு வழக்கறிஞர் தனசேகர், சுரேஷ்குமார், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், விவசாயிகள், வேளாண்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முடிவில் தென்னிந்திய தொழில் வர்தத்கசபை செயலாளர் ராகவன் நன்றி கூறினார்.